மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.43/2022</u>

2026 ம் ஆண்டு மார்ச் 02 ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரத்தினசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.03.2026 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். என்னை இந்த வழக்கில் சாட்சி அளிப்பதற்காக 1ம் பிரதிவாதி கோவிந்தசாமி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைதானா என்றால் ஆமாம். 1974 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் ஆதியில் எனது தாத்தா பழனிச்சாமி என்பவருக்கு பாத்தியப்பட்டதா என்றால் ஆமாம்.

2. என் தாத்தாவுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று வாரிசுகள் முத்துசாமி, சுப்பராய கவுண்டர் மற்றும் சின்னச்சாமி ஆகியோர்கள் வாரிசுகள். என் தாத்தா இறந்ததற்கு பின்னிட்டு மேற்படியாரின் வாரிசுகளான மூன்று பேரும் 02.08.2002 ஆம் தேதியில்

பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் ஆமாம். மேற்படி பாகப்பிரிவினையில் சுப்பராய கவுண்டருக்கு ஏ அட்டவணை சொத்துக்களும் எனது தகப்பனார் முத்துசாமி என்பவருக்கு சி அட்டவணை சொத்துக்களும் எனது பெரியப்பா சின்னச்சாமி என்பவருக்கு பி அட்டவணை சொத்துக்களும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான் அந்த ஆவணத்தின் அடிப்படையில் எனது பெரியப்பாவிற்கு ரீ.ச.எண்.5/1ல் 70 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான்.

3. அதேபோல் என் தகப்பனாருக்கும் ரீ.ச.எண்.5/1ல் 70 சென்ட் நிலம் பாத்தியம் என்றால் சரிதான் அந்த 70 சென்ட் பூமிக்கு செக்குபந்தியாக தென்வடல் ரோட்டுக்கு கிழக்கு என்றுதான் செக்குபந்தி கண்டுள்ளது என்றால் சரிதான் வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் எனது பெரியப்பாவும் நானும் எனது பெரியப்பா மகனான முத்துசாமி என்பவரும் சேர்ந்து ஒரு நளினி காந்த் மனைவி கோமதி என்பவருக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் கொடுத்தோமா என்றால் ஆமாம். மேற்படி வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 1 ஏக்கர் 40 சென்ட் பூமியை தென்வடல் ரோட்டுக்கும் கிழக்கு என செக்குபந்தி கண்டு தான் விற்பனை செய்து உள்ளோம் என்று சொன்னால் சரிதான்.

4. 2002 ஆம் ஆண்டு எங்கள் குடும்பத்தில் செய்து கொள்ளப்பட்ட வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் எல்பிபி வாய்க்கால் பாத்தியம் குறித்து குறிப்பிட்ட எதுவும் சொல்லப்படவில்லை என்றால் ஏற்கனவே அந்த வழியாக கிணற்று நீர் பாய்ந்து கொண்டிருந்ததால் அதனால் நாங்கள் எல்பி பி வாய்க்கால் பாத்தியத்தை பொறுத்து வா.சா.ஆ.2 கிரைய

ஆவணத்தில் சேர்க்கவில்லை என் தாத்தா ஏற்படுத்திக் கொண்ட 1974 பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சொத்து எல்பிபி ஆயர் கட்டிற்கு கட்டுப்படாத சொத்துக்கள் என்று கண்டு தான் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு பின்னிட்டு தான் எல்பிபி வாய்க்கால் பாத்தியம் கொடுக்கப்பட்டது.

5. வா.சா.ஆ 3 கிரய ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். மேற்படி வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் கிரைய சொத்தில் எங்களுக்கு எந்தவிதமான பாத்தியமும் இல்லை என்றும் பின்னால் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதை எங்கள் செலவில் தீர்த்துக் கொடுப்பதாகவும் வாசகங்கள் கண்டு தான் நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்களிடம் கிரயம் பெற்ற கோமதி என்பவர் தான் கிரயம் பெற்ற சொத்துக்களை குமரன் நகர் என வீட்டு மனைகளாக பிரிவினை செய்து வட சின்னாரிபாளையம் கிராம பஞ்சாயத்தில் அனுமதி பெற்று வீட்டுமனைகளை விற்பனை செய்த விபரம் எங்களுக்கு தெரியும் என்றால் தெரியும்.

6. நாங்கள் ஏற்படுத்தி கொடுத்த கிரையா ஆவணத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கின் வாதியான கோமதி என்பவர் சைட் எண்.1 ஐ கோமதி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் 4 வது பத்தியில் ரீ.ச.எண்.5 பொறுத்து மட்டும்தான் நான் சாட்சியமளிக்க வந்துள்ளதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம்.

7. ரீ.ச.எண்.5/1 பூமியை பொறுத்து நாங்கள் கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு அதை மறுத்து சாட்சியம் அளிக்க எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி அமைதியான முறையில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றும், அதில் 1ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதி எனது பெரியப்பா மகன் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் ஏற்படுத்தி கொடுத்த ஆவணத்திற்கு எதிராக நான் சாட்சியமளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.02 18:35:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்